DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No.332/2019**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW4 | Caste | : | |
| Name | : | சதீஸ்குமார் | Age | : | 36 |
| F/N | : | தங்கவேலு | Occupation | : | சார்பு ஆய்வாளர் (ஏர்வாடிதர்ஹா காவல் நிலையம்) |
| Village | : | | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 22nd day of February 2024.

**22.02.2024**
**(எதிரி ஆஜர்)**
**முதல் விசாரணை**

1. நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் ஏர்வாடிதர்ஹா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.02.2018 ம் தேதி காலை 09.30 மணிக்கு உச்சிப்புளி காவல் நிலையத்தில் நான் பொறுப்பில் இருந்தபோது 28.01.2018 ம் தேதி உச்சிப்புளி காவல் நிலைய மனு எண்.35/2018, மனுவினை பரிசீலனை செய்து மனுவின் தன்மைக்கேற்ப உச்சிப்புளி காவல் நிலைய குற்ற எண். 22/2018, பிரிவுகள் 294(b), 323 இதச ஆக வழக்கு பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** முதல் தகவல் அறிக்கையின் அசலையும், புகார் மனுவையும் இணைத்து சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். ஒரு நகலை எனது விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்றைய தினமே காலை 10.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் பூமி மற்றும் இஸ்மாயில் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2. பின்பு சாட்சிகள் முருகேசன், ஹாஜா முகைதீன், தனவேலு, பூமி மற்றும் இஸ்மாயில் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரியை தேடி வந்த நிலையில் அவர் மாண்புமிகு இராமநாதபுரம் மாவட்ட நீதிமன்றத்தில் முன்பிணையில் சென்றுவிட்டபடியால் அவரை கைது செய்யவில்லை. பின்னர் காயம்பட்ட வாதிக்கு சிசிக்சையளித்த மருத்துவரை விசாரித்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **(விபத்து பதிவேடு அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**காயச்சான்றிதழ் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மருத்துவர் அளித்த சான்றின்படி இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 294(b), 325 இதச ஆக மாற்றம் செய்தேன். பின்னர் வழக்கு விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

(குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை)

**<u>மறு விசாரணை</u>** : இல்லை

**(ஒப்பம்/-க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**